கழக தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு சைதை மேற்கு பகுதி 140வது வார்டு மாமன்ற உறுப்பினரும், பொதுக்குழு உறுப்பினருமான வழக்கிறஞர் எம்.ஸ்ரீதரன் தலைமையில் சைதை மேற்குகிழக்கு பகுதி கழக செயலாளர்கள் எம். கிருஷ்ணமூர்த்தி, எம்.சி, இரா.துரைராஜ் எம்.சி, முன்னிலையில் சைதாப்பேட்டை அரங்கநாதன் சுரங்கப்பாதை அருகில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு அமைச்சர்கள் எ.வ.வேலு, மா.சுப்பிரமணியன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, துணைமேயர் மு.மகேஷ்குமார் ஆகியோர் 8072 பேருக்கு 5 லிட்டர் அரிசி குக்கர் வழங்கி சிறப்புரை ஆற்றினார்கள். இக்கூட்டத்தில் கழக நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பித்தனர்.

கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு குன்றத்தூர் நகர தி.மு.க சார்பில் நகரச் செயலாளர் கோ.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் கழக பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் கழக கொள்கை பரப்பு செயலாளர் திருச்சி சிவா எம்.பி., ஆகியோர் கலந்துக்கொண்டு உரையாற்றினார்கள். அருகில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், நகர செயலாளர் எஸ்.ஜபருல்லா, குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், பகுதிச் செயலாளர் த.ஜெயக்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் மதுராந்தகம் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் பிறந்தநாள் விழாவையொட்டி மதுராந்தகம் அரசினர் மருத்துவமனை பிறந்த 8 குழந்தைக்கு தங்க மோதிரத்தை காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்எல்ஏ அணிவித்தார். அருகில் நகர மன்ற தலைவர் மலர்விழி குமார், நகர செயலாளர் குமார், ஒன்றிய செயலாளர் சத்யசாய், ஒன்றிய நிர்வாகிகள் ஆறுமுகம், தனசேகரன், திருஞானசெல்வம் ஆகியோர் உள்ளனர்.

டாக்டர் கலாநிதி வீராசாமி – புதுக்கோட்டை எம்.எம்.அப்துல்லா வழிகாட்டுதல்

குவைத் தி.மு.க. அயலக அணி சார்பில் - கழகத் தலைவர் பிறந்தநாள் விழா!

சிதம்பரம் ந.தியாகராஜன் ஒருங்கிணைப்பு! புதூர் உத்தமனூர் ஜலீல் முஸ்தபா தலைமை!

குவைத், மார்ச்.3-

குவைத் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக அயலக அணி சார்பில் கழக தலைவரும், தமிழ்நாடு முதல மைச்சருமான மு.க.ஸ்டா லின் அவர்களின் 72வது பிறந்தநாள் விழா மிக எழுச்சியுடன் கொண்டாடப்பட்டது.

தி.மு.கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சரு மான மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாள் உலகம் முழுவதும் வாழும் தமிழர்கள் மிகுந்த எழுச்சியுடன் கொண்டாடி வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாக குவைத் நாட்டில் தி.மு.கழக அயலக அணி குவைத் மண்டலத்தின் சார்பாக, கழக அயலக அணி தலைவர் டாக்டர். கலாநிதி வீராசாமி எம்.பி மற்றும் செயலாளர் புதுக் கோட்டை எம்.எம்.அப்துல்லா எம்.பி ஆகியோரின் வழிகாட்டுதலின்படி தி.மு.கழக அயலக அணி குவைத் நாட்டின் பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன் ஒருங்கிணைப்பில், மண்டல அமைப்பின் செயலாளர் புதூர் உத்தமனூர் ஜலில் முஸ்தபா தலைமையில், சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வில் அமைப்பின் இணைச் செயலாளர்கள் ஆயங்குடி ஜெ.சையது முஸ்தபா, குடந்தை சி.தியாக ராஜன், சேகரை வெ.செல்லதுரை ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அமைப்பின் பொருளாளர் புதுவை அ.அறிவுமணி வரவேற்புரை ஆற்றினார்.

அமைப்பின் துணைச் செயலாளர் முத்துப்பேட்டை ம.சபரிவாசன், இளைஞரணி செயலாளர் உளுந்தூர் பேட்டை சு.வெங்கடேசன், மகளிரணி செயலாளர் தஞ்சை சாந்தி பாலசுப்ரமணியன், விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் பரங்கிப் பேட்டை ம.நசுரு தீன் முகம் மது, பொறியாளர் அணி துணைச் செயலாளர் மருதூர் பிரேம்குமார், மகளிர் அணி துணைச் செயலாளர் திருவாரூர் கனிமொழி கார்த்திகேயன், திமுக கழக முன்னோடி நாசர் சலாவுதீன், எழுத்தாளர் நிர்மலா தேவி தமிழரசன், கவிஞர் கமருதீன், கல்ப் ஸ்பிக் சலீம், அலி மேன்பவர் சப்ளை நிறுவனர் அலிபாய், மற்றும் குவைத் தளபதி பேரவை, வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் நலச்சங்கம், தமிழ் மக்கள் சேவை மையம், குவைத் தமிழ் ஓட்டுநர் சேவை மையம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், விடுதலை சிறுத்தைகள் கட்சி, தமிழர் வாழ்வுரிமை இயக்கம், கலகலப்பு நண்பர்கள் குழு, நந்தவனம், தமிழ் நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகம், மனிதநேய ஜனநாயக கட்சி, தமிழர்கள் ஓட்டுநர் சேவை மையம் மற்றும் பல தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகளும் தி.மு.கழக நிர்வாகிகளும் வாழ்த்துரை வழங்கினர். ஒவ்வொருவரும் தங்களின் வாழ்த்துரையில் அப்பாவுக்கு பிறந்தநாள் வாழ்த்துகள் என அன்போடு கூறி மகிழ்ந்தனர்.

2026 இல் இருநூறு தொகுதியை வென்றிட களப்பணி ஆற்றுவோம் என்றும், அனைத்து புலம்பெயர் தமிழர்களும் வாக்களிக்க தமிழ்நாடு செல்லும் வகையில் அவர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவோம் என்றும் உறுதிமொழி ஏற்கப்பட்டது.

இந்நிகழ்வில் அமைப்பின் நிர்வாகிகள் திருவாரூர் ச.குமார், விழுப்புரம் ஐ.ஜஹாங்கீர், உளுந்தூர்பேட்டை மு.நஜிர் அகமது, மேட்டுவிளை ஜ.ஜானவாஸ், தானிப்பாடி சே.அஸ்ரப் அலி, திருக்கோவிலூர் அ.பொன்முடி., கூத்தாநல்லூர் ஏ.ஷாகுல் ஹமீது, திருச்சி ஏ.ஜெ.எம்.இஷாக் ஜக்கரியா, தக்கலை ஜோசப் பெர்லின், குடந்தை த.மணிகண்டன், இராதாபுரம் அஜிஜுல்லா, நாராயணகுப்பம் சையத் துராப்ஜான்,

லட்சுமாங்குடி பி.ஆர். பழனி, மயிலாடுதுறை ராஜலட்சுமி பாபு, கள்ளக்குறிச்சி மதியழகன், புதுக் கோட்டை அசாருதீன், இராமநாதபுரம் முகம்மது பைசான் அலி (இராமநாதபுரம் பைசான்), திருபுவனம் ஹ.மைதீன் பாட்சா, விழுப்புரம் பா.அய்யனார், கொள்ளிடம் காவேரி செல்வம், உடையார்பாளையம் செந்தில்குமார், நெய்வேலி கோபாலகிருஷ்ண, ஆயங்குடி சையது ரகுமான், அணைக்காடு ரோம்லஸ் தேவசகாயம், கன்னியாகுமரி ராஜேஷ், மங்கலம்பேட்டை

ஜெ.சாஜிதீன், கன்னியாகுமரி ஜோசப் எடிசன், பரங்கிப்பேட்டை எஸ்.முகமது உசேன், நாராயண குப்பம் சதாம் உசேன், கொரடாச்சேரி காளிமுத்து, முகம்மது, புலியூர் குமார், தஞ்சை ரா.ராஜ ராஜன், தக்கலை தனுஷ் ராஜா, ஆத்தூர் ஜான் பாட்ஷா, கோட்டை பி.மோதிலால்,

பரமக்குடி பி.மோகன், திருவாரூர் திருவரங்கன், லட்சுமாங்குடி சசிகுமார், நெல்லை வில்சன், உளுந்தூர்பேட்டை சுப்பிர மணியன், குடந்தை ஆர்.முருகன், வடமாமாந்தூர் தக்கா பா.நஜீர், நாராயணகுப்பம் ஷேக்ஆலம், கள்ளக்குறிச்சி பெ.சின்னசாமி ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

நிகழ்வின் இறுதியில் கூடியிருந்த அனைவரும் ஒன்று கூடி தமிழ்நாடு போராடும்! தமிழ் நாடு வெல்லும்! எனும் முழக்கத்தை விண்ணதிர முழங்கினர்.

அமைப்பின் துணைப் பொருளாளர் திருவடத்தனூர் ஏ.எஸ்.முஹம்மத் ரபீக் நன்றி கூறினார்.

சமூக மேம்பாட்டு அமைப்புகளின் முன்னோடிகள் கருத்து!

தனித்துவம் நிறைந்த மக்கள் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின்!

சென்னை, மார்ச், 3–

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவின் போது அவர் அரசின் சாதனைளை பட்டியலிட்டு காட்டாமல் அனைத்திற்கும் மேலாக தமிழ் நிலத்தின் தலையாய உரிமை, அது சார்ந்த கொள்கைகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பது அவசியம் என தமிழ்நாட்டின் தனித்துவத்தை தேசத்திற்கு உணர்த்தியுள்ளார். என 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டியுள்ளது.

அது வருமாறு:–

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள், மாநிலம் முழுவதும் கோலாகலமாக கொண்டாப்பட்டது. பிரதமர் மோடி, மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் மற்றும் கூட்டணி கட்சி தலைவர்கள் மட்டுமன்றி, அனைத்து அரசியல் கட்சி தலைவர்களும் அவருக்கு மகிழ்வுடன் வாழ்த்து தெரிவித்தனர். இந்த கொண்டாட்டத்தில் கூட, தனக்கான முக்கியத்துவத்தை அவர் உருவாக்காமல், தமிழ் நிலத்திற்கான உரிமைகளுக்காக முழக்கமிட்டிருப்பது தேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது. குறிப்பாக தனது பிறந்த நாளையொட்டி, வீடியோ செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார். இது தான் அவர் 'தனித்துவம் நிறைந்த ஒரு மக்கள் தலைவர் என்பதை மீண்டும் உணர்த்தியுள்ளது' என்கின்றனர் சமூக மேம்பாட்டு அமைப்புகளின் நிர்வாகிகள்.

'தினகரன்' தலையங்கத்தில் பாராட்டு!

தினகரன்

மார்ச் 2, 2025 ஞாயிற்றுக்கிழமை

தனித்துவமான தலைவர்

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள், மாநிலம் முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. பிரதமர் மோடி, மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் மற்றும் கூட்டணி கட்சி தலைவர்கள் மட்டுமன்றி, அனைத்து அரசியல் கட்சி தலைவர்களும் அவருக்கு மகிழ்வுடன் வாழ்த்து தெரிவித்தனர். இந்த கொண்டாட்டத்தில் கூட, தனக்கான முக்கியத்துவத்தை அவர் உருவாக்காமல், தமிழ் நிலத்திற்கான உரிமைகளுக்காக முழக்கமிட்டிருப்பது தேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது. குறிப்பாக தனது பிறந்த நாளையொட்டி, வீடியோ செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார். இது தான் அவர் 'தனித்துவம் நிறைந்த ஒரு மக்கள் தலைவர் என்பதை மீண்டும் உணர்த்தியுள்ளது' என்கின்றனர் சமூக மேம்பாட்டு அமைப்புகளின் நிர்வாகிகள்.

என்னுடைய பிறந்தநாள் வேண்டுகோளாக, உங்களுக்கு ஒரு கோரிக்கையை முன்வைக்கிறேன். இன்றைக்கு தமிழ்நாடு தன்னுடைய உயிர்ப்பிரச்சினையான மொழிப்போரையும், தன்னுடைய உரிமை பிரச்சினையான தொகுதி மறுசீரமைப்பையும் எதிர் கொண்டுள்ளது. இதன் உண்மையான நோக்கத்தை, நீங்கள் மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். தொகுதி மறுசீரமைப்பு என்பது, நமது மாநிலத்தின் சுயமரியாதை, சமூகநீதி மற்றும் நம்முடைய சமூக மேம்பாட்டுத் திட்டங்களை பெரிதும் பாதிக்கும். இதை நீங்கள் மக்களிடம் கொண்டு செல்லவேண்டும். ஒவ்வொருவரும் மாநிலம் காக்க எழுந்து நிற்க வேண்டும். இந்தியாவுக்கே வழிகாட்டியாக நாம் போராட்டத்தை தொடங்கினோம்.

இப்போது கர்நாடகா, பஞ்சாப், தெலங்கானா போன்ற மாநிலங்களில் இருந்து நமக்கான ஆதரவுக்குரல் வந்துள்ளது. இதை பார்த்த ஒன்றிய அரசு இந்தியை திணிக்கவில்லை என்று சொல்கிறது. ஆனால் அதற்கான அனைத்து முன்னெடுப்புகளையும் எடுத்துக் கொண்டே இருக்கிறது. அதேபோல் தமிழ்நாட்டுக்கான தொகுதிகளை குறைக்க மாட்டோம் என்று மட்டும் தான் சொல்கிறார்கள். தவிர, மற்ற மாநிலங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க மாட்டோம் என்று சொல்லவில்லை.

நாம் கேட்பது மக்கள் தொகை அடிப்படையில் தொகுதிகளை பிரிக்காதீர்கள். நாட்டின் வளர்ச்சிக் காக மக்கள் தொகையை கட்டுப்படுத்திய தென்மா நிலங்களை தண்டிக்காதீர்கள். அப்படி நடந்தால் அதை தமிழ் நாடும், திராவிட முன்னேற்ற கழகமும் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம். நாம் ஒரு உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும். தமிழ்நாட்டின் நலனையும், எதிர்காலத்தையும் யாருக்காகவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டுக்காக நாம் ஒன்றுபட்டு போராட வேண்டும். தமிழ்நாடு போராடும். தமிழ்நாடு வெல்லும், இந்த வேண்டுகோள் தான் தமிழக முதல்வர் ஒரு தனித்துவம் வாய்ந்த தலைவர் என்பதை மீண்டும் ஒரு முறை பறைசாற்றியுள்ளது.

அதாவது இக்கட்டான அரசியல் சூழல்கள், நிதி சார்ந்த பிரச்சினைகள், அரசின் சாதனைகளை பட்டியலிட்டும் காட்டவில்லை. இவை அனைத்திற் கும் மேலாக, தமிழ்நிலத்தின் தலையாய உரிமைகள் முக்கியம். அது சார்ந்த கொள்கை முரண்பாடுகளை மக்கள் மன்றத்தில் கொண்டு சேர்ப்பது மிகவும் அவசியம். அதன் மூலம் தமிழகத்தின் தனித்துவத்தை தேசத் திற்கு உணர்த்த வேண்டும் என்பதே அவரது பிரதான நோக்கம். இதை தனது பிறந்த நாள் விழா பொதுக் கூட்ட மேடையிலும் வெளிப்படுத்தியுள்ளார் முதல்வர். நம்முடைய தோழமை கட்சி தலைவர்கள் அனைவரும், ஒரே மேடையில் இணைந்திருக்கி றோம். நாம் தமிழ் நாட்டுக்கான உரிமைக்குரலை. எழுப்புவதற்கான வாய்ப்பை இந்த மேடை வழங் கியுள்ளது. இந்த மேடையே உரிமைக்களமாக, வெற்றிக்கான அடித்தளமாக அமையும் என்று முழக்கமிட்டுள்ளார். இதனால் தான் தனித்துவமான முதல்வராக மட்டுமன்றி, தலைவராகவும் உயர்ந்து நிற்கிறார் அவர் என்கின்றனர் சமூக மேம்பாட்டு அமைப்புகளின் முன்னோடிகள்.

இவ்வாறு 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு புகழ் சேர்த்துள்ளது.

கழகத் தலைவர் – முதல்வர் பிறந்தநாளை – தமிழர் எழுச்சி நாளாக

கழக மீனவர் அணி சார்பில் நல உதவிகள் வழங்கிக் கொண்டாடுவோம்!

அணிச் செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, மார்ச் 3-

முதலமைச்சர் கழகத்தலைவர் அவர்களின் பிறந்நாள் தமிழர் எழுச்சி நாளாக கழக மீனவர் அணியினர் நல உதவிகள் வழங்கி மாநிலம் முழுவதும் கொண்டாடுவோம் என தி.மு.க. மீனவர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தி.மு.க. மாநில நிர்வாகிகள் அவசர ஆலோசனைக் கூட்டம் 27.02.2025 அன்று காலை 10 மணியளவில் திருவெற்றியூர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. இல்லத்தில் மாநில துணைத் தலைவர்கள் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., இரா.மதிவாணன் ஆகியோர் முன்னிலையில் மீனவர் அணிச் செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் மாநிலத்துணை செயலாளர்கள் வீ.பி.பொன்னரசு, மு.தம்பித்துரை, ஜி. மனோகரன், க.எரிக் ஜீடு, வக.ஜெயபிரகாஷ், சி. புளோரன்ஸ், ஆர். பத்மநாபன் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கினர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

மார்ச் 1ல் 72வது பிறந்தநாள் விழா காணும் முதலமைச்சர் கழகத்தலைவர் தேசம் வியக்கும் திராவிட நாயகர் முக.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை கழக மீனவர் அணியினர் மாவட்டம், மாநகரம், ஒன்றியம், நகர பகுதிகளிலும், மீனவ கிராமங்கள் தோறும் கழகக் கொடி ஏற்றி, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி, நலத்திட்ட உதவிகள் செய்து கொண்டாடவும், மார்ச் மாதம் முழுவதும் மீனவர்களுக்கு படகு போட்டிகள், விளையாட்டு போட்டிகள், பள்ளி குழந்தைகளுக்கு நோட்டுப் புத்தகங்கள், விளையாட்டு உபகரணங்கள் நலிந்த மீனவர்களுக்கு உதவிகள் வழங்கி கொண்டாட வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முதலமைச்சர் கழகத்தலைவர் மீனவர் நலன்காக்கும் திராவிட நாயகர் அவர்கள் மீனவர் நலன் சார்ந்து வழங்கிய பல்வேறு நலதிட்டங்களுக்காகவும் குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டம் நீரோடி முதல் பழவேற்காடு வரை உள்ள மீனவ கிராமங்களை இயற்கை சீற்றங்களில் இருந்தும் கடல் அரிப்பு, போன்ற மீனவர்கள் எதிர் கொள்ளும் சவால்களுக்கு உறுதுணையாக, தூண்டில் வளைவுகள் மீன்பிடி இறங்குதளங்கள் துறைமுகங்கள் என தமிழ்நாடு அரசின் சொந்த நிதியிலிருந்து ரூபாய் ஆயிரம்கோடி அளவிற்கு திட்டங்கள் நிறைவேற்றி தந்தமைக்காகவும் கழக மீனவர் அணி சார்பாக நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

தமிழ்நாட்டிலிருந்து வெளி நாட்டிற்கு மீன்பிடி தொழிலுக்கு செல்லும் மீனவர்கள் கடலில் எதிர்நாட்டு கடற்படை யினரால் கைது செய்யப்பட்டு சிறையில் வாடிய மீன வர்களை மீட்பதற்கும் அவர்களின் உரிமைகளுக்காகவும் கழகத்தின் சார்பில் அயலக அணியை உருவாக்கி மீனவர்களை பாதுகாப்பாக தமிழ் நாட்டிற்கு மீட்டு அழைத்து வந்தற்காக நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

மீனவர் நலன் சார்ந்த முத்தான திட்டங்கள்!

இராமேஸ்வரத்தில் நடை பெற்ற மீனவர் நல மாநாட்டில் கலந்துகொண்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இது வரை எந்த முதல்வரும் செய்திராத வகையில் அந்த மாநாட்டில் 1000 கோடி ரூபாய் அளவில் மீனவர் நலன் சார்ந்த முத்தான 10 நலத்திட்டங்களை அறிவித்து அதை நிறைவேற்றி தந்தமைக்காவும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

கடந்த 18.02.2025 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற மீனவர்கள் நன்றி தெரிவிக்கும் நிகழ்வில் இராமேஸ்வரம் மீனவர்கள் வைத்த கோரிக்கைகளை உடனடியாக பரிசீலனை செய்து ரூபாய் 360 கோடி நிதியை ஒதுகீடு செய்து நிறைவேற்றி தந்த மீனவர்களின் காவலர் முதலமைச்சர் - தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம்.

பேரறிஞர் அண்ணா அவர்களால் சிந்தனை சிற்பி சிங்காரவேலர் அவர்கள் மறைக்கப்பட்ட மாமேதை எனவும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் சென்னையில் சிந்தனை சிற்பி சிங்கார வேலர் மாளிகை திறக்கப்பட்டதும் சிங்கார வேலர் பெயரில் மீனவர் தொகுப்பு வீடுகள் திட்டம் தந்தது என என்றும் தி.மு.கழகத்தால் போற்றப்படும் சிந்தனை சிற்பி சிங்கார வேலருக்கு மேலும் மகுடமாக சென்னையில் சிங்கார வேலர் நினைவிடம் உள்ள லேடி லெவிங்டன் பள்ளியின் பெயரை சிந்தனை சிற்பி சிங்கார வேலர் பள்ளி என பெயர் மாற்றம் செய்திட வேண்டும் என்று தமிழ்நாட்டில் உள்ள மீனவர் நலச்சங்களின் கோரிக்கையை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கனிவுடன் ஆய்வு செய்திட வேண்டும் என கழக மீனவர் அணி சார்பாக கோரிக்கை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சென்னை உள்ளிட்ட தமிழ் நாடு முழுவதும் வரலாறு காணாத கனமழையால் தத்தளித்தபோதும், புயலால் சேதமடைந்த பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று மக்களோடு மக்களாக நின்று அவர்களின் தேவைகளை போர்கால அடிப்படையில் நிறைவேற்றி தந்து நிவாரணம் அறிவித்து அவர்கள் துயரத்தில் துணை நின்ற தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், அல்லும் பகலும் கொட்டும் மழையிலும் மக்கள் குறை தீர்க்க களத்தில் நின்ற தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் கழக மீனவர் அணி சார்பாக நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

ஒன்றிய அரசின் தீய எண்ணம்!

இந்தி திணிப்பை என்றும் எதிர்ப்போம். தமிழ்நாடு அரசுப் பள்ளிகளில் இருமொழிக் கொள்கையில் பயின்று, உலகத் தரத்திற்கு உயர்ந்த பல்லாயிரம் சாதனையாளர்களை பட்டியலிடலாம். தற்போதைய கால கட்டத்தில் பள்ளிக்குச் செல்லும் பிள்ளைகளுக்கு பெரும் சவாலாக உள்ள புத்தகச் சுமைகளை குறைப்பது எப்படி என்று பெற்றோர்கள் சிந்திக்கும் வேளையில் கணக்கு, அறிவியல் போன்ற பாடங்களில் உள்ள கடினத் தன்மையை, பெரும் சவாலாக எடுத்து தினமும் நமது மாணவச் செல்வங்கள் கல்வி பயின்று வரும் நிலையில், கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் மிக மிக தாழ்ந்த நிலையில் உள்ள மீனவர் சமுதாய இளம் தலைமுறையினர் பாரம்பரியமான மீன்பிடி தொழிலை விட்டு, உயர்படிப் புகள் படித்து முன்னேறி வேலை வாய்ப்புகளை பெற வேண்டும் என முயன்று முன்னேறும், வேளையில், இந்தி என்ற மூன்றாவது மொழியை திணித்து வட நாட்டவர் வாழ, தமிழ்நாட்டவர் வேலை வாய்ப்பை பெற முடியாமல் தடுக்கும் ஒன்றிய அரசின் தீய எண்ணத்தால், அதிகார ஆணவத் திமிரோடு கொண்டுவரத் துடிக்கும் மும்மொழி கொள்கையை, கட்டாய இந்தி திணிப்பை தமிழ்நாட்டு மீனவ மக்களும் ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை மேலும் இன்னொரு மொழிப்போரை தமிழர்கள் மீது திணிக்க வேண்டாம் எனவும் ஒன்றிய கல்வி அமைச்சருக்கும், ஒன்றிய அரசுக்கும் கழக மீனவர் அணி சார்பாக கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறோம் என ஏகமனதாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாவட்ட மீனவரணி நிர்வாகிகள்: கே.தேசிங்கு து.அல்லி முத்து இரா.பிரகாஷ் எம்.எல். வேலன், எஸ்.செல்வம், டி.மகேந்திரன், ஆர்.குமரன், வி.ரமேஷ் எஸ்.கே.இளங்கோ, ஏ.சுரேஷ், நல்லதம்பி, மதிவாணன், கிருபானந்தம், என்.சண்முகம், குமரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் தலைமை! நொளம்பூர் வே.ராஜன் எம்.சி. முன்னிலை!

மதுரவாயல் 147 வது வட்டத்தில் 1000 நபருக்கு அறுசுவை உணவு!

காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. வழங்குகிறார்! ரமணி மாதவன் எம்.சி. பங்கேற்பு!

சென்னை, மார்ச். 3

தமிழ்நாடு முதல்வர், கழகத் தலைவர் அவர்களின் 72 வது பிறந்தநாளை முன்னிட்டு

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்குப் பகுதி, 147 வது வட்ட தி.மு.க. சார்பில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, இன்று (03.03.2025 திங்கட்கிழமை) மதியம் 11.30 மணியளவில், ஆலப்பாக்கம், கோவிந்தப்பா நாயக்கர் தெரு சந்திப்பில் 147 வது வட்டக் கழகச் செயலாளர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் தலைமையில் ஆலப்பாக்கம் உதயம் இ.வேணு நிகழ்ச்சி ஏற்பாட்டில் 1000 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் வளசரவாக்கம், 11 வது மண்டலக் குழுத் தலைவர், நொளம்பூர் வே.ராஜன் முன்னிலையில் சென்னை பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழு உறுப்பினர், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி அறுசுவை உணவு வழங்குகிறார்.

இதில் 147 வது வார்டு மாமன்ற உறுப்பினர், கல்வி நிலைக்குழு உறுப்பினர் ரமணி மாதவன் கலந்து கொள்ள உள்ளதால் நமது வட்டத்திற்கு உட்பட்ட மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மகளிர் அணியினர், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு 147 வது வட்டக் கழகச் செயலாளர், மேனாள் கவுன்சிலர், மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்குப் பகுதி, 147 வது வட்ட தி.மு.க. சார்பில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு 147 வது வட்டக் கழகச் செயலாளர், மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் தலைமையில் மாவட்டப் பிரதிநிதி ஆலப்பாக்கம் க.பிருந்தாவனம் நிகழ்ச்சி ஏற்பாட்டில் ஆலப்பாக்கம் நாற் சந்தியில் கழகக் கொடி ஏற்றி 500 பேருக்கு அறுசுவை உணவினை பகுதிக் கழகச் செயலாளர், மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன் வழங்கினார். இதில் 147 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ரமணி மாதவன் மற்றும் 147 வது வட்டத்திற்குட்பட்ட மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

திராவிட இனத்தின் பேரரசர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் 72 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை வடக்கு மாவட்டம் சிறுபான்மை நல உரிமை பிரிவு சார்பில் 34 ஆவட்டம் சகாயம் நகரில் மாவட்ட துணைத் தலைவர் டி அசோக்ராஜ் தலைமையில் மாமன்ற உறுப்பினர் திருமதி ஷர்மிளா காந்தி கருணாநிதி இனிப்பு வழங்கினார். நிகழ்ச்சியில் பகுதி பொருளாளர் அ.செந்தூர் பாண்டியன் பகுதி துணைச் செயலாளர் எம் லதா மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் ஆர் பி எஸ் சத்தீஸ்வரி தொழிலாளர் அணி தலைவர் சிந்தாமணி பாஸ்கரன் சிறுபான்மை நிலை உரிமை பிரிவு துணை அமைப்பாளர் மகிமைதாஸ் ஆகியோர் கலந்து கொண்டு இனிப்பு வழங்கினர்.